**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.160/2020**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 26.11.2024 in accordance with the provision of Act 1 of 1873.

Name :சக்கரைபாணி Father's Name : சின்னப்பையன்

துவக்க நேரம்: 11.55 A.M.

<u>**1, 4, 5** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. எனது அப்பாவின் பெயர் என்ன என்றால் சின்னபையன். 1-வது பிரதிவாதி என்பவர் எனக்கும் 2 முதல் 5 வரையான பிரதிவாதிகளுக்கும் தாயார் என்றால் சரிதான். 6-ஆம் பிரதிவாதி தங்காயி 3 ஆம் பிரதிவாதி முத்துசாமி என்பவரின் மனைவி என்றால் சரிதான்.

2. 7, 8 பிரதிவாதிகள் 2-ஆம் பிரதிவாதி பெரியசாமியின் மருமகள்கள் என்றால் சரிதான். 9-ஆம் பிரதிவாதி முருகேசன் என்பவர் 2-ஆம் பிரதிவாதி பெரியசாமியின் மகன் என்றால் சரிதான். 10-ஆம் பிரதிவாதி சரஸ்வதி யார் என்றால் 2-வது பிரதிவாதியின் மனைவி.

3. வழக்கு சொத்துக்கள் ஆரம்பத்திலிருந்து எனது மூதாதையர்களுக்கு பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து கிராம நத்தத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாவா 3-ஆம் அயிட்ட சொத்திற்கு எனது பெயரில் பட்டா உள்ளது, எனது சொத்திற்கான பழைய சர்வே எண் என்ன என்றால் 70, 72 ஆகும். மேற்படி சர்வே எண் உள்ள இடத்தில் தார்சு வீடு, தகரம் வேயப்பட்ட பகுதி,

சிமெண்ட் அட்டை போட்டு வீடு உள்ளது என்றால் சரிதான்.

4. மேற்படி தாவா 3-ஆம் அயிட்ட சொத்திற்கு பட்டா எனது பெயரில் உள்ளது என்றால் சரிதான், ஆனால் நான் அதில் குடியிருக்கவில்லை. 3-ஆம் அயிட்ட சொத்தில் 2-ஆம் பிரதிவாதி பெரியசாமி, 7 முதல் 10 வரையான பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1-வது அயிட்ட சொத்தின் சர்வே எண் 181/22-ல் உள்ள சொத்து 6-ஆம் பிரதிவாதி தங்காயி பெயரில் பட்டா பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

5. 1-வது அயிட்ட சொத்தில் யார் குடியிருக்கிறார்கள் என்றால் தங்காயி மற்றும் அவரது வாரிசுகள் குடியிருக்கிறார்கள். 2-வது அயிட்ட சொத்து சர்வே எண். 184/23 -ல் உள்ள சொத்து 10-ஆம் பிரதிவாதி சரஸ்வதி பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். 10-ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா நிலத்தில் நான் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான்.

6. தாவா 1, 2, 3-வது அயிட்ட சொத்துக்கள் ஆதியில் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் இல்லை, அது அனைவருக்கும் பாத்தியப்பட்ட பொது குடும்ப சொத்தாகும். எனது அப்பா பெயரில் தாவா சொத்துக்களுக்கு பட்டா எதுவும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான், நத்தம் புறம்போக்கு என்பதால் தாவா சொத்துக்கு எந்தவித ஆவணமும் இல்லை.

7. தாவா 3 அயிட்ட சொத்தில் உள்ள வீடுகளுக்கும் பட்டாவின் அடிப்படையில் தான் வரி செலுத்தி வருகிறோம் என்றால் அனுபவத்தின் அடிப்படையில் வீட்டு வரி செலுத்தி வருகிறோம். தாவா சொத்துக்களுக்கு அவரவர்களுக்கு தனிப்பட்ட பட்டா உள்ளது என்றாலும், அதனை நான் மறைத்து வழக்கிற்காக பூர்விக சொத்து என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8. தாவா சொத்துக்கள் குறித்து எனது அப்பா உயிருடன் இருந்த காலத்திலேயே வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். ஏற்கனவே வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்ட நிலையில் தற்பொழுது தனியாக பாகம்

பிரிக்கவேண்டிய தேவையில்லை என்றாலும், எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்யயவேண்டும் என்றால் சரியல்ல.

வாதி தரப்பில் மறுவிசாரணை:

1. பெரியசாமி, முத்துசாமி ஆகியோர் பெயரில் பட்டா வாங்கியபிறகு நாங்கள் பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை என்றால் ஆமாம்.

**1, 4, 5** பிரதிவாதிகள் தரப்பில் மறு விசாரணையின் பெயரில் குறுக்கு விசாரணை:

1. ஏற்கனவே நாங்கள் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டுள்ள நிலையில் மீண்டும் பாகம் பிரித்துக் கொள்ள தேவையில்ல என்றால் சரியல்ல. அந்த பிரதிவாதிகளை இடையூறு செய்யவேண்டும் என்று இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

முடிவு நேரம்: 12.26 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-S.Munusamy
Additional District Munsif(F.A.C), Attur

Typed by Selvi. L. Kalaiselvi - O.S.160/2020, Dt.26.11.2024.